S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208
# உள்ளாட்சி அரசு
தினசரி தமிழ் காலை நாளிதழ்
"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்
youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5
* COIMBATORE சனி நவம்பர் 29 * 2025 * மலர் -1 * இதழ்-181* VOL-1 * ISSUE-181 விலை ரூ.3 * பக்கம் -4

# டிட்வா புயலை எதிர்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் !

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம்! !




சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, டித்வா புயல் காரணமாக அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், மயிலாடுதுறை. நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 14 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம்.சாய்குமார் பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பெ.அமுதா, நில நிர்வாக ஆணையர் டாக்டர். கே.எஸ். பழனிசாமி, பேரிடர் மேலாண்மை ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை,நவ.29

• சென்னையிலும் அதிகமாக மழை பெய்வதற்கு வாய்ப்பு என கணிக்கப்பட்டுள்ளது.

• அதிகனமழை எச்சரிக்கை விடுத்துள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் மீட்பு குழுக்களை அனுப்பி உள்ளோம்.

டிட்வா புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக சென்னை எழிலகத்தில் உள்ள அவசர கால செயல்பாட்டு மையத்தில் மாவட்ட ஆட்சியர்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். அப்போது, தேவையான மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அதிகாரிகளை உடனடியாக அனுப்பி வைக்க அவர் உத்தரவிட்டார்.

இதைத்தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த முதலமைச்சர் கூறியதாவது:

★ சென்னையிலும் அதிகமாக மழை பெய்வதற்கு வாய்ப்பு என கணிக்கப்பட்டுள்ளது.

★ டிட்வா புயல் முன்னெச்சரிக்கை தொடர்பாக அனைத்து நடவடிக்கைளும் எடுத்துள்ளோம்.

★ கடந்த கனமழையின்போது அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

★ அதிகனமழை எச்சரிக்கை விடுத்துள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் மீட்பு குழுக்களை அனுப்பி உள்ளோம்.

★ தாழ்வான பகுதிகளில் வசிப்போருக்காக முகாம்கள் தயார் நிலையில் உள்ளது. உணவுப்பொருட்களும் கையிருப்பில் உள்ளது.

★ டெல்டா மாவட்ட மக்களை எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வஞ்சிக்காமல் இருந்தால் சரி. அவர் எப்போதும் அப்படி தான் சொல்லிக் கொண்டு இருப்பார். அவருக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

### 30–ஆம் தேதி அதிகாலையில் கரையைக் கடக்கும்:

# சென்னையை நோக்கி வரும் 'டித்வா' புயல்!

சென்னை, நவ.29–

இலங்கை அருகே உருவாகியுள்ள 'டித்வா' புயல் வடக்கு–வடமேற்கு திசையில் மணிக்கு 7 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வருகிறது. இது இதே திசையில் நகர்ந்து, தமிழக கடலோரம் வழியாக சென்னையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் புயல் 30–ஆம் தேதி அதிகாலையில் தென் ஆந்திரம் – வட தமிழகம் வழியாக கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் தமிழகக் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும்.

வட கிழக்கு பருவமழை நீண்ட நாள் ஓய்வெடுத்தது. ஆனால் கடந்த ஒரு வாரமாக மீண்டும் தீவிரம் அடையத் தொடங்கியது. வங்கக்கடலில் அடுத்தடுத்து 2 புயல்கள் தோன்றின. முதலாவது புயல் தென்கிழக்கு வங்கக்கடலில் இந்தோனேசியா அருகே மலாக்கா நீரிணையையொட்டி உருவானது. இதன் காரணமாக அந்தமான் தீவுகளில் கன மழை பெய்தது.


இந்தப் புயல் காற்றழுத்தமாக இருக்கும் வரை மேற்கு–வடமேற்கு திசையில் நகர்ந்தது. இது அதே திசையில் வந்தால் சென்னையை நோக்கி வரும்.

ஆனால் புயலாக மாறிய பின்னர் எதிர்திசையை நோக்கி திரும்பியது. அத்துடன் வலுவும் இழந்து விட்டது.

அதே நேரத்தில் இலங்கைக்கு அருகே புதிய காற்றழுத்தம் உருவானது. இது படிப்படியாக வலுப்பெற்று நேற்று புயலாக மாறியது. இதற்கு 'டித்வா' எனப்பெயர் சூட்டப்பட்டது.

இந்தப் புயலின் காரணமாக இலங்கையில்க கடந்த 2 நாட்களாக கனமழை வெளுத்துவாங்கி வருகிறது. அங்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மலைப்பகுதியில் நிலச்சரிவும் ஏற்பட்டது. இதனால் சுமார் 50 பேர் பலியாகி விட்டார்கள்.

இந்தப் புயல் வடக்கு–வடமேற்கு திசையில் நகர்ந்து



கொண்டிருக்கிறது. இன்று அதிகாலை 5.30 மணி நிலவரப்படி சென்னைக்கு தெற்கே 540 கி.மீ. தொலைவில்நிலைகொண்டிருந்தது. அதே நேரத்தில் இலங்கையின் திரிகோணமலையில் இருந்து 50 கி.மீ.க்கு அப்பால் நிலை கொண்டிருந்தது. அதே நேரத்தில் மணிக்கு 7 கி.மீ. வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்தப் புயல் வட தமிழக கடலோரம், புதுச்சேரி மற்றும் தென் ஆந்திர கடலோர மாவட்டங்கள் வழியாக 30–ஆம் தேதி அதிகாலை கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்கள் நெடுகிலும் 3 நாட்களுக்கு தொடர்மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. குறிப்பாக டெல்டா மாவட்டங்களிலும், சென்னையை ஒட்டிய வட மாவட்டங்களிலும் மிக பலத்த மழைக்கு வாய்ப்பு உள்ளது.

தமிழகத்தை ஒட்டியே புயல் நகர்ந்து வருவதால் கடல் மிகவும் கொந்தளிப்பாக காணப்படுகிறது. இதனால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்று டெல்டா மாவட்டங்களில் மிக கனமழை வரை பெய்ய வாய்ப்புள்ளது. இது தவிர சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களிலும் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாளை வட மாவட்டங்களிலும், தென் மாவட்டங்களிலும் ஒருசில இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது. குறிப்பாக திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் மிக கன மழை பெய்யும்.

தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை ஆகிய இடங்களில் கன மழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

இதற்கிடையே டெல்டா மாவட்டங்களுக்கு 6 பேரிடர் மீட்புப் படைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சென்னையைப் பொருத்தவரை புழல், செம்பரம்பாக்கம், பூண்டி ஆகிய ஏரிகளில் இருந்து முன்னெச்சரிக்கையாக உபரி நீர் இப்போதே திறந்து விடப்பட்டுள்ளது.




தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி பகுதியில் மழையால் சேதமடைந்த சாலை சீரமைக்கப்படுவதை கனிமொழி எம்.பி. ஆய்வு செய்தார். அருகில் கலெக்டர் இளம்பகவத், மேயர் ஜெகன் ஆகியோர் உள்ளனர்.

# வாகனம் மோதி 2 இளைஞர்கள் பலி!

## சாவில் மர்மம் இருப்பதாக உறவினர்கள் தர்ணா!!

பாலக்கோடு.நவ.28–

பாலக்கோடு அருகே வாகனம் மோதி 2 இளைஞர்கள் பலியாகினர். சாவில் மர்மம் இருப்பதாக கூறி உறவினர்கள் இன்று காவல் நிலையத்தை முற்றுகையிட்டு தர்ணாவில் ஈடுபட்டனர்.

தர்மபுரி மாவட்டம், சொன்னம்பட்டியை சேர்ந்தவர் கூலி தொழிலாளி நந்தகுமார். இவரது மகன் சுனில் குமார் (19) இவர் கெலமங்கலம் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். அதே ஊரை சேர்ந்த ராஜீவ்காந்தி மகன் முருகன் (20) தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் 3ம் ஆண்டு டிப்ளமோ படித்து வந்தார். இந்த நிலையில் நேற்று இரவு 8 மணி அளவில் சுனில்குமார் தன்னுடைய மொபட்டில் முருகனை பின்னால் உட்கார வைத்துக் கொண்டு பாலக்கோடு நோக்கி சென்று கொண்டிருந்தார், சின்னார்தஅள்ளி கூட் ரோடு அருகே சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்த அடையாளம் தெரியாத வாகனம் மோதி இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். தகவலறிந்த பாலக்கோடு



முருகன்



சுனில்குமார்

போலீசார் இருவரின் உடலை மீட்டு தர்மபுரி அரசு மருத்துவமனை சவ கிடங்கிற்க்கு அனுப்பி வைத்தனர். இந்நிலையில் இன்று காலை சொன்னம்பட்டியை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு சாவில் மர்மம் இருப்பதாகவும், இரண்டு இளைஞர்களும் மாற்று சமூகத்தை சேர்ந்த பெண்களை காதலித்து வந்த நிலையில் பெண் வீட்டார் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இளைஞர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த நிலையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதால் திட்டமிட்டு இளைஞர்களை கொலை செய்து உள்ளதாகவும், குற்றவாளி களை கைது செய்யும் வரை உடலை வாங்க மாட்டோம் என போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு காவல் நிலையம் முன்பு உள்ள சாலையில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர். தகவலறிந்த டி.எஸ்.பி. ராஜசுந்தர் பாலக்கோடு காவல் நிலை யத்திற்கு சென்று பேச்சு வார்த்தை நடத்தினார்.



ராமேசுவரம் ராமநாதசுவாமி கோவில் உண்டியல்கள் திறக்கப்பட்டு எண்ணப்படுவதை படத்தில் காணலாம்.



காவேரிப்பட்டினம் ஜதாப், பையூர், போத்தாபுரம், தேவர்முக்குளம் ஆகிய பகுதிகளில் நிலக்கடலை அறுவடை பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.



# சின்ன குனிச்சியில் பகுதி நேர நியாய விலை கடையினை நல்லதம்பி எம்.எல். ஏ. துவக்கி வைத்தார்!

திருப்பத்தூர் நவ.29

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி கந்திலி ஒன்றியம் குனிச்சி ஊராட்சி சின்னகுனிச்சி பகுதியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் மூலம் ரூ 8.30இலட்சம் மதிப்பீட்டு கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்தினை

மாண்புமிகு திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும் திருப்பத்தூர் ஒன்றிய கழக செயலாளருமான அ. நல்லதம்பி பல் நோக்கு கட்டிடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பகுதி நேர நியாய விலை விற்பனையை தொடக்கி வைத்தார்.

திருப்பத்தூர் ஒன்றிய குழு தலைவர் திருமதி திருமுருகன் தலைமையில்

திருப்பத்தூர் மாவட்ட குழு உறுப்பினர் குணாசேகரன் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் ஒன்றிய துணை தலைவர் மோகன்குமார், அரசு துறை அதிகாரிகள், மாவட்ட குழு உறுப்பினர் சுப்பிரமணி, ஒன்றிய குழு உறுப்பினர் சக்கரை, கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொது மக்கள் மற்றும் பெண்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டார்.

## கள்ளக்குறிச்சி மாவட்டத்தில்

# இந்திய அரசியலமைப்பு நாள் உறுதிமொழியை ஏற்றுக் கொண்ட காவல்துறையினர்!





கள்ளக்குறிச்சி நவ.29

இந்திய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டதன் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26ஆம் தேதி அரசியலமைப்பு தினம் கொண்டாடப்படுகிறது. எனவே கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் G.S.மாதவன் தலைமையில் அரசியலமைப்பு நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

உறுதிமொழி – இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும், அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய, பொருளியல், அரசியல் நீதி, எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு, சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை, சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை, ஆகியவற்றை எய்திடச் செய்யவும், அனைவரிடையேயும், தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும் உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும் உள்ளார்ந்த உறுதியுடையராய், நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் 26ஆம் நாளாகிய , ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம். என்று உளமார உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சரவணன், மாவட்ட தனிப்பிரிவு காவல் ஆய்வாளர் சக்தி, காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், மாவட்ட காவல் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் கலந்துகொண்டு இந்திய அரசியலமைப்பு நாள் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

## போச்சம்பள்ளி அருகே

# வெப்பாலம்பட்டி ஸ்ரீ திம்மராய சுவாமி கோவிலில் கும்பாபிஷேகம்!



கிருஷ்ணகிரி நவ.29

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தாலுக்கா, வெப்பாலம் பட்டி கிராமத்தில் புதிதாக கட்டியுள்ள ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ திம்மராய சுவாமி கோவில் நூதன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று. முன்னதாக ஸ்ரீ கருடாழ்வார் மூல மந்த்ர ஹோமம், யாதவ கிருஷ்ணர் மூல மந்த்ர ஹோமம், ஸ்ரீ வராஹமூர்த்தி /மூல மந்த்ர ஹோமம், கிராம தெய்வங்கள் மூலமந்த்ர ஹோமங்கள், நாடி சந்தானம், நேத்ரோ மிலன் பிராண பிரதிஷ்டை, பூர்ணாஹூதி, தீபாராதனை நடைபெற்றது.

பின்னர் அனைத்து பக்தர்கள் புடைசூழ, ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்ட புனித நீர் கலசங்கள் கோபுரத்தின் உச்சியை அடைந்தது.

அங்கு சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க, கோபுர கலசத்தில் புனித நீர் ஊற்றி நூதன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கோபுரக் கலசத்தில் இருந்து புனித நீர் தெளிக்கப்பட்டபோது, கூடியிருந்த பக்தர்கள் பக்திப் பரவசத்துடன் "கோவிந்தா! கோவிந்தா!" என விண்ணதிர முழக்கமிட்டனர். பின்னர் மூலவருக்கு சிறப்பு அபிஷேகங்கள் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த புதிய திருக்கோவிலின் திருப்பணியை மேற்கொண்டு,

கும்பாபிஷேகம் வெற்றிகரமாக நடைபெற பாடுபட்ட வெப்பாலம்பட்டி கிராம பொதுமக்கள் மற்றும் கோவில் நிர்வாகக் குழுவினரை அனைவரும் பாராட்டினர்.

## காரிமங்கலத்தில்

# பிக்கப் வேனை திருடிய வழக்கில் இருவர் கைது! ஒருவர் தலைமறைவு!!

காரிமங்கலம்நவ.29

தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் வட்டார வளர்ச்சி அருகே கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு தனியார் வே பிரிட்ஜில் நிறுத்தப்பட்டிருந்த பிக்கப்வேன் மர்ம நபர்களால் திருடி சென்றனர். இது குறித்து காரிமங்கலம் போலீசாரிடம் வாகன உரிமையாளர் வெள்ளையன் கொட்டாவூர் பகுதியைச் சேர்ந்த செல்வம் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் காரிமங்கலம் போலீசார் சிசிடிவி கேமரா பதிவை ஆதாரமாகக் பிக்கப்வேனை திருடி கொண்டு சென்றவர்களை தனிப்படை அமைத்து தேடி வந்தனர்.

இந்நிலையில் போலீசாரின் விசாரணையில் திருப்பத்தூர் மாவட்டம் , வாணியம்பாடி பகுதியைச் சேர்ந்த மோகன் (35) என்பவர் பிக்கப் வேனை திருடி சென்று நாட்றம்பள்ளி பகுதியை சேர்ந்த புவனேஸ்வர் (40) மற்றும் தங்கமணி (32), ஆகியோரிடம் பிக்கப்வேனை விற்றுள்ளனர். இதன் அடிப்படையில் நாட்றம்பள்ளி பகுதியில் போலீசார் தேடி வந்த நிலையில் புவனேஸ்வர், தங்கமணி ஆகியோரை கைது செய்தனர். மேலும்தப்பிஓடிதலைமறைவாகியமோகன்என்பவரை போலீசார் தேடி வருகின்றனர். மேலும் இச்சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து கோர்ட்டில் ஆஜர் படுத்தி இருவரையும் தர்மபுரி கிளை சிறையில் அடைத்தனர்.

# தாராபுரம், சின்னக்காம்பாளையம் மாணவரணி நடத்தும் மரம் நடுவிழா!

தாராபுரம்.நவ.29

துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காங்கயம் பாளையத்தில் உள்ள அரவணைக்கும் கருணை இல்லத்தில் உள்ள மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது மற்றும் மரம்



நடப்பட்டது. எஸ் வி செந்தில் குமார் அவர்கள் தலைமையில் பேரூர் கழக செயலாளர் ர.பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் பேரூர் கழக அவைத்தலைவர் சி சுப்பிரமணியம் மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சன் பாலு மேற்கு ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் தமிழ்ச் செல்வன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் குகன் பேரூர் ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் ஐடி வின் மாவட்ட துணை அமைப்பாளர் ஆனந்தி மற்றும் பேரூர் இளைஞர் அணி மாணவர் அணி பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# ஸ்டார் ஹெல்த் பாலிசிதாரர்களுக்கு சிறப்பு கண் சிகிச்சை!

## வாசன் & ASGஇன் புதிய கூட்டணி!!



சென்னை நவ.29

ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ், வாசன் கண் பராமரிப்பு (தெற்கு) மற்றும் ASG கண் மருத்துவமனை (வடக்கு) ஆகியவை புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் இந்தியா முழுவதும் ஸ்டார் ஹெல்த் பாலிசிதாரர்களுக்கு பணமில்லா மற்றும் ஒருங்கிணைந்த கண் சிகிச்சை சேவைகளை வழங்கும் அகில இந்திய வலைப்பின்னலை உருவாக்குகிறது. வாசன் மற்றும் ASG இணைந்து 170 கிளைகள் மற்றும் 650க்கும் மேற்பட்ட சிறப்பு மருத்துவர்களுடன் நாடு முழுவதும் தரமான கண் சிகிச்சை வழங்கி வருகின்றன. கண்புரை, கிளௌகோமா, ரெட்டினா, கார்னியா, நீரிழிவு விழித்திரை நோய், குழந்தைகள் கண் பராமரிப்பு உள்ளிட்ட அனைத்து முக்கிய துறைகளிலும் சிகிச்சை வழங்கும் இந்த இணையம், பாலிசிதாரர்கள் எந்த இடத்திலிருந்தும் தடையில்லாமல் சிகிச்சை பெற உதவுகிறது.

இந்த கூட்டுறவு, காப்பீடு வைத்திருப்பவர்களுக்கு மேலும் எளிதான, தரமான மற்றும் விரைவான கண் சிகிச்சை கிடைக்க வழிவகுக்கும் முக்கிய முன்னேற்றமாக அமைகிறது.

# திருச்சியில் பெப்ஸ் புதிய 'கிரேட் ஸ்லீப் ஸ்டோர்' ஷோரூம்கள் திறப்பு!



திருச்சி, நவ.29

ஸ்பிரிங் மெத்தைகள் மற்றும் உறக்கத் தீர்வுகள் முன்னணி பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ், திருச்சியில் தில்லை நகர் மற்றும் திருவெறும்பூரில் இரண்டு புதிய பிரத்யேக 'கிரேட் ஸ்லீப் ஸ்டோர்களை' திறந்துள்ளது. ஒவ்வொரு ஷோரூம் சுமார் 1300 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டு, வாடிக்கையாளர்கள் நேரில் தயாரிப்புகளை பார்வையிட்டு, தொட்டுணர்ந்து தேர்வு செய்யும் வசதியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. புதிய ஸ்டோர் தொடக்கத்தின், வாடிக்கையாளர்கள் ஸ்பிரிங், பெப்ஸ் ரெஸ்டோனிக் மெமரி ஃபோம் மற்றும் பெப்ஸ் சுபீரியர் ஸ்பிரிங் , பிரீமியம் தலையணைகள், மெத்தை பாதுகாப்பு உறைகள் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் ஒரே இடத்தில் பார்க்க முடியும். கம்ஃபர்ட், சுப்ரீம், ரெஸ்டோனிக் மெமரி ஃபோம் மற்றும் சுப்பீரியர் ஸ்பிரிங் என நான்கு மேம்படுத்தப்பட்ட தயாரிப்புத் தொகுப்புகள் வாடிக்கையாளர்களின் உற்பத்தித் திறனும் வசதியையும் உயர்த்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிர்வாக இயக்குனர் திரு. ஜி. சங்கர் ராம், திறப்பு விழாவில் கூறியதாவது: "புதுமையான தொழில்நுட்பம் மற்றும் நேர்த்தியான வடிவமைப்பின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த உறக்க அனுபவத்தை வழங்குவதே எங்கள் நோக்கம். திருச்சியில் புதிய 'கிரேட் ஸ்லீப் ஸ்டோர்கள்' மூலம் தமிழ்நாட்டில் மேலும் பல குடும்பங்களுக்கு உலக தரமான உறக்க தீர்வுகளை கொண்டு சேர்க்கிறார்."



திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருக்கோவிலூர் நகராட்சிக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களிடமிருந்து சிறப்புத் தீவிரத் திருத்தம் (SIR) தொடர்பான கணக்கீட்டுப் படிவங்களை சேகரிக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சார் ஆட்சியர் ஆனந்தகுமார் சிங் நகராட்சி ஆணையாளர் திவ்யா.

## விழுப்புரத்தில் எஸ்.ஐ.ஆர் ஐ ரத்து செய்ய வேண்டி

# முஸ்லிம் மக்கள் கழக நிறுவன தலைவர் ஜைனுதீன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்!

விழுப்புரம்.நவ.29

விழுப்புரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், ஒன்றிய பாஜக அரசுக்கு துணைபோகும் தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு குறித்து கண்டனம் தெரிவித்து, எஸ்.ஐ.ஆர். (S.I.R) நடைமுறையை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி முஸ்லிம் மக்கள் கழகத்தின் நிறுவனத்தலைவர் ச.சு. ஜைனுதீன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாநில இளைஞர் அணி தலைவர் வி.விக்ரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், விழுப்புரம் நகர செயலாளர் சுஹைல் முகம்மது வரவேற்பு உரையாற்றினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக மதினா, ஆயிஷா பேகம், தேவேகி, அமிதா, சாகிரா பானு, பாத்திமா பி.ஆயிஷா, பி.ஷர்மிளா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், முஸ்லிம் மக்கள் கழக நிறுவனத் தலைவர் முனைவர் ச.சு. ஜைனுதீன், விழுப்புரம் மாவட்ட தலைவர் ஷோக்கத் அலி, பழனிவேல், ஆரிய சாமி, ஏழுமலை, , அலாவுதீன், செல்வம், நாகராஜ்,பிரபு, உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தனர்.

கூட்டத்தின் இறுதியில் காணை ஒன்



றிய தலைவர் மணிகண்டன் பங்கு கொண்டோருக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக நன்றி உரையாற்றினார்.

எஸ்.ஐ.ஆர் என்ற பேரில் இந்தியாவில் உள்ள வாக்காளர்களை அலறவிடும் ஒன்றிய பி.ஜே.பி. அரசுக்கு துணை போகின்ற தேர்தல் ஆணையத்தின் அலட்சிய போக்கினால் வாக்காள பெருமக்கள் பெரும் அதிருப்தியிலும் ஒரு வித குழப்பத்திலும் இருந்து வருகிறார்கள் இதனை முஸ்லீம் மக்கள் கழகம் தேர்தல் ஆணையத்தை வன்மையாக கண்டித்து மேலும், நிலவும் குளறுபடியான எஸ்.ஐ. ஆர்ஜ ரத்து செய்ய வேண்டுமென தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தும் விதமாக முஸ்லீம் மக்கள் கழகம் சார்பாக நடைபெற்ற ஆலோசனைகூட்டத்தின் வாயிலாக தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வாணியம்பாடியில்

# மேதகு பிரபாகரன் 71வது பிறந்தநாளை முன்னிட்டு நா.த.க. சார்பாக ரத்த தானம் , மரக்கன்றுகள் வழங்கபட்டது!

வாணியம்பாடி.நவ.29

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில்,நாம் தமிழ்தேசிய தலைவர் மேதகு வேலுபிள்ளை பிரபாகரன் அவர்களின் 71வது பிறந்தநாளை முன்னிட்டு வாணியம்பாடி நாம் தமிழர் கட்சியின் சார்பாக அரசு மருத்துவமனையில் சுமார் 50க்கும் மேற்பட்டவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கியும் , 20க்கும் மேற்பட்டவர்கள் குருதிதானம் அளித்தும், 100க்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள்.

மேலும் இந்நிகழ்வில் நாம் தமிழர் கட்சியை சார்ந்த மாநில பொறுப்பாளர்கள் சையத் கவுஸ், முத்துகிருஷ்ணன், நாகராஜ், தரணி, கண்ணகி, சுரேஷ், புனிதா மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள் அருள் கணேஷ், சீமான் ராஜேஷ், வெங்க



டேஷ், ராஜேஷ், வைரமுத்து, வெங்கடேசன் உட்பட 50 க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

# திருப்பத்தூரில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## இளைஞர் அணியினர் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!!



திருப்பத்தூர் நவ.29

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த கிருஷ்ணகிரி செல்லும் சாலையில் அமைந்துள்ள அண்ணாவின் திருவுருசிலைக்கு மாலை அணிவித்து மாநில இளைஞரணி செயலாளர் மற்றும் தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

அப்பொழுது பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் நலத்திட்டங்கள் கொடுத்து கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் டி ரகுநாத். அரசு, நகர மன்ற தலைவர் சங்கீதா வெங்கடேசன், நகர மன்ற துணைத் தலைவர் ஏ ஆர் சபியுல்லா, நகர இளைஞரணி அமைப்பாளர் டி எஸ் மாதேஸ்வரன், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் இ ஐயப்பன், அரவிந்தன், ரமணன்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெங்கடேசன், கே பி ஜோதி ராஜன், டி பி ரமேஷ். ஐ டிவி தொழில்நுட்ப அணி நதீம், நகர மாணவரணி துணை அமைப்பாளர் விஜி, தயாளன், மருது, தவ்லத் பாஷா, பாலாஜி, கமல், குமரி, இளைஞர் அணி மற்றும் மாணவர் அணி, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், வார்டு உறுப்பினர்கள், நகர நிர்வாகிகள், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் வட்டம் ஆயந்தூர் ஊராட்சியில் இந்திய வெண்மை புரட்சியின் தந்தை வர்கீஸ் குரியன் அவர்களின் 104வது பிறந்தநாளை முன்னிட்டு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் சார்பில் நடைபெற்ற தேசிய பால்வள தின விழாவில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தொடங்கி வைத்து, பால் உற்பத்தியாளர்களுக்கு தாது உப்புக்கலவை மற்றும் குடல்புழு நீக்க மருந்து வழங்கினார். உடன் துணைப்பதிவாளர் (பால்வளம்) ஆ.ஸ்ரீகலா, ஆவின் பொது மேலாளர் சு.ராஜேஷ் உட்பட பலர் உள்ளனர்.

### ராஜபாளையத்தில்

## பைக்கில் வந்தவர்களை வழிமறித்து தாக்கி வழிப்பறி செய்த இருவர் கைது!

ராஜபாளையம் நவ 29

ராஜபாளையம் ஆண்டர்தம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் வெள்ளத்துரை மகன் சந்திர பிரபு(21) இவர் இராஜபாளையம் புதிய பேருந்து நிலையம் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் சங்கரன்கோவில் ரோட்டில் எம் ஆர் நகர் சுடுகாட்டுக்கு செல்லும் விலக்கு அருகில் சென்று கொண்டு இருந்ததாகவும், அப்போது அங்கு நின்றுகொண்டு இருந்த இராஜபாளையம் மங்காபுரத்தை சேர்ந்த சதுரகிரி மகன் காளிராஜ் (18), மற்றும் மாப்பிள்ளைசுப்பையா தெருவை சேர்ந்த கருப்பையா மகன் மாரிச்செல்வம்(18) ஆகியோர் சந்திர பிரபு வை வழிமறித்து நிறுத்தியதாகவும் பைக்கை நிறுத்தியதும், இருவரும் சேர்ந்து பிராந்தி குடிக்க பணம் இல்லை பணம் கொடு என்று கேட்டதாகவும், அதற்கு அவர்களிடம் பணம் இல்லை என்று சொன்னதும், இருவரும் சேர்ந்து பார்த்து நாங்க பணம் கேட்டா தர மாட்டியாடா என்று சொல்லிக்கொண்டு மாரிச்செல்வம் அவர் கையில் வைத்திருந்த பீர் பாட்டிலால் புகார்தாரர் நெற்றியில் ஓங்கி அடித்ததாகவும், அதனால் பீர் பாட்டில் உடைந்து நெற்றியில் ரத்தக்காயம் ஏற்பட்டு கீழே விழுந்து விட்டதாகவும், காளிராஜ் அவர் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து பின்பக்கமாக பிடித்துகொண்டு நெற்றியில் முட்டி, முன்கு ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்தனர் எழுந்து அங்கிருந்து தப்பிக்க முயன்றதும், மாரிச்செல்வம் புகார்தாரரை பார்த்து சாவுடா என்று சொல்லிக்கொண்டு அவர் கையில் வைத்திருந்த உடைந்த பீர் பாட்டிலால் புகார்தாரரின் வயிற்றில் குத்தியதாகவும், புகார்தாரர் சற்று விலகிவிட்டதாகவும், புகார்தாரர் விலகாமல் இருந்தால் பீர் பாட்டில் குத்தி அந்த இடத்திலேயே செத்துபோய் இருந்திருப்பார் எனவும், அந்த நேரம் அந்த இடத்தில் இருந்த இராஜபாளையம் எம் ஆர் நகரை சேர்ந்த வெள்ளைத்துரை நகர் பாண்டி, மற்றும் மாப்பிள்ளை சுப்பையா தெருவை சேர்ந்த ரமேஷ் மகன் சுரேசும் சேர்ந்து அவர்களை சத்தம்போட்டதும் இருவரும் புகார்தாரர் வைத்திருந்த பைக்கை திருடிக்கொண்டு காளிராஜ் அவர் கையில் வைத்திருந்த அருவாளை சுழற்றி நாங்கதாண்டா இந்த ஊருவ பெரிய ரவுடிங்க எங்க மேல கொலை கேசு இருக்கு என்று சொல்லிக்கொண்டு நடு ரோட்டில் நின்று இருவரும் சத்தம் போட்டு பைக்கை முறுக்கியதாகவும், அதனால் அந்த நேரம் தியேட்டரில் சினிமா பார்த்துவிட்டு வந்தவர்களை பார்த்து பயந்து ஓடியதாகவும், அங்கிருந்த கடைக்காரர்கள் பயந்துபோய் கடைகளை அடைத்துவிட்டதாகவும், பின்னர் இருவரும் சேர்ந்து சந்திர பிரபு வை பார்த்து போலீசுல கம்ளெயின்ட் கொடுத்தாநாளைக்குநீஉயிருடன்இருக்க மாட்டே என்று மிரட்டிவிட்டு பைக்கில் சென்றுவிட்டதாகவும், கூறப்படுகிறது இதனையடுத்து சந்திர பிரபு இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் உள்ள சந்திர பிரபு தெற்கு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் இன்ஸ்பெக்டர் ராஜேஷ் வழக்கு பதிவு செய்து தலைமறைவாக இருந்த மாரிச் செல்வம்.காளிராஜ் இருவரையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்இருவரும்ஏற்கனவேகொலை மற்றும் வழிப்பறி வழக்கில் சிறையில் இருந்து பிணையில் வெளியே வந்தவர்கள் என்று குறிப்பிடத்தக்கது.

### மறைமலைநகர் நகராட்சியில்

## மாற்றுத்திறனாளி தேவராஜ் நகரமன்ற நியமன உறுப்பினராக பதவி ஏற்பு!

### வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ. பங்கேற்று வழங்கினார்!!



செங்கல்பட்டு, நவ.29

செங்கல்பட்டு மாவட்டம் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளை நியமன அடிப்படையில் உறுப்பினர்களாக நியமிக்கும் மசோதா சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில் மாற்றுத்திறனாளிகளை உடனடியாக நியமனம் செய்வதற்கான பணிகளில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளது.

2984 ஊரக உள்ளாட்சி அமைப்புகளிலும், 650 மாற்று திறனாளிகள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் நியமனம் செய்யப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர் நகராட்சியில் மாற்றுத்திறனாளி நகரமன்ற உறுப்பினராக தேவராஜ் என்பவர் தேர்வு செய்யப்பட்டார்.

செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகர மன்ற தலைவர் ஜெ.சண்முகம் ஆகியோர் தலைமையில் மறைமலைநகர் நகராட்சி அலுவலக வளாகத்தில் ஆணையாளர் ரமேஷ், மாற்றுத்திறனாளி தேவராஜிக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வின் போது நகர மன்ற துணைத் தலைவர் சித்ரா கமலக்கண்ணன், நகர மன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## சிதம்பரத்தில் நகர திமுக சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

### 1000 பேருக்கு அன்னதானம், நலத்திட்ட உதவி!!



சிதம்பரம் நவ 29

சிதம்பரத்தில் நகர திமுக சார்பில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு 1000 பேருக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை சிதம்பரம் நகராட்சி சேர்மன் செந்தில் குமார் வழங்கினார், சிதம்பரம் தெற்கு வீதி திமுக அலுவலகத்தில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா முன்னிட்டு சிதம்பரம் நகரகழக செயலாளரும், நகர் மன்ற தலைவருமாகிய செந்தில்குமார் தலைமையில் 1000 பேருக்கு அன்னதானம், மற்றும் வேட்டி சேலை போர்வை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, நிகழ்ச்சியில் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜேம்ஸ் விஜயராகவன், நகர கழக துணை செயலாளர்கள் இளங்கோவன், பாலசுப்பிரமணியன், மாவட்ட பிரதிநிதி கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கவுன்சிலர் அப்புசந்திரசேகரன், சிதம்பரம் நகராட்சி கவுன்சிலர்கள் மணிகண்டன், சரவணன், அசோகன், ஷகிலா, இஸ்மாயில் லதா கல்பனா விஜயலட்சுமி வேலு சுதா, தாரணி, சுனிதாமாரியப்பன், நகர இளைஞரணி அமைப்பாளர் மக்கள் அருள், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ராயர், மாரியப்பன் வேலு வெங்கடேசன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பைக் விபத்தில் காயமடைந்த வாலிபர் உயிரிழப்பு!

நத்தம், நவ,29

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சிரங்காட்டுபட்டியை சேர்ந்தவர் பழனிச்சாமி (60) விவசாயி.இவர் கடந்த 19ம் தேதி தனது பைக்கில் செந்துறை நோக்கி சென்ற போது மங்களப்பட்டி பிரிவு அருகே உள்ள ஒற்றன்குட்டு பகுதியில் சென்று கொண்டிருந்த போது பின்னால் சின்னமலையூரை சேர்ந்த சரவணன் என்பவர் ஒட்டி வந்த பைக் அவர் பைக் மீது மோதியது. இதில் தடுமாறி கீழே விழுந்து பழனிச்சாமி, சரவணன், மற்றும் பைக்கில் பின்னால் அமர்ந்து வந்த அவரது நண்பர் கணபதி உள்ளிட்ட 3 பேருக்கும் தலை,கை,கால்களில் பலத்த காயம் ஏற்பட்டது.ஆபத்தான நிலையில் அக்கம்பக்கத்தினர் அவர்களை மீட்டு மதுரை அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்த்தனர்.இதில் சிகிச்சை பலனில்லாமல் கணபதி நேற்று முன்தினம் இரவு இறந்து விட்டார். இச்சம்பவம் குறித்து நத்தம் போலீஸ்சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.



கடலூர் மாவட்டம், திட்டக்குடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்கள் விடுபடாமல் மீளப்பெறுவது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.



புதுக்கோட்டை மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வீரையா தலைமையில் மூத்த வழக்கறிஞர் திருஞானசம்பந்தம் முன்னிலையில் வெடி வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள்.இந்நிகழ்வில் வழக்கறிஞர் வெங்கடேசன் முருகேசன் பரமசிவம் சுரேஷ் அறிவழகன் வள்ளிக்கண்ணன் ரமேஷ் ராமச்சந்திரன் நாகராஜன் வடிவேலு செந்தில் குமார் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

### SSN & சென்னை SNU:

## 581 மாணவர்களுக்கு ரூ. 7.5 கோடி கல்வி உதவித்தொகை!



சென்னை நவ 29

உயர்தர கல்வியை எல்லா மாணவர்களுக்கும் எளிதில் வழங்கும் நோக்கத்தை வலியுறுத்தும் வகையில், SSN கல்விக் கழகமும் சென்னை ஷிவ் நாடார் பல்கலைக்கழகமும் இணைந்து 581 மாணவர்களுக்கு மொத்தம் ₹7.5 கோடி மதிப்பிலான கல்வி உதவித்தொகைகளை வழங்கின. சிறப்பு கல்வியாளர்கள், தொழில் துறை வல்லுநர்கள், முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்ட இந்த விழாவுக்கு ரெடிங்டன் லிமிடெட் தலைவர் பேரா. ஜே. ராமச்சந்திரன் முக்கிய விருந்தினராக இருந்தார். நிகழ்வில் வேந்தர் ஆர். ஸ்ரீனிவாசன், ஷிவ் நாடார் அறக்கட்டளை & HCL குழுமத்தின் தொடங்கிய தலைவர் சுந்தர் மகாலிங்கம், SSN மேலாண்மைக் குழு தலைவர் ஷிவ் நாடார், துணைவேந்தர் டாக்டர் ஸ்ரீமன் குமார் பட்டாச்சார்யா, பதிவாளர் டாக்டர் என். நல்லுசாமி, மற்றும் SSN முதல்வர் டாக்டர் ராதா எஸ் ஆகியோரும் பங்கேற்றனர். உதவித்தொகை தத்துவத்தை விளக்கி பேசிய டாக்டர் ஸ்ரீமன் குமார் பட்டாச்சார்யா, "இந்த உதவித்தொகைகள் வாய்ப்புகளைப் பெருக்கும் சக்தி, மேலும் நிதிச் சிக்கல்கள் கல்விக்கு தடையாக இருக்கக்கூடாது" எனக் குறிப்பிட்டார். இதுவரை 11,000+ அறிஞர்களுக்கு ஆதரவு அளித்துள்ள ஷிவ் நாடார் அறக்கட்டளையின் தாக்கத்தை அவர் நினைவுபடுத்தினார். பேரா. ஜே. ராமச்சந்திரன், "கல்வி மனிதகுலத்தின் மிக வலிமையான வலுக்கட்டாயம்; திறமை வாய்ப்பைச் சந்திக்கும் போது அதிசயம் நடக்கிறது" என கூறி, SPURS போன்ற கிராமப்புற மாணவர்களுக்கான திட்டங்களை கல்வி அடைவு சமத்துவத்தின் முன்னுதாரணமாக பாராட்டினார்.

## கிளாசிக்கல் சினிமாவின் மாயாஜாலத்தை சீனியர் சிட்டிசன்களுக்கு நினைவூட்டும் அச்சரிய கொண்டாட்டம்!

### அக்சிஸ் வங்கி அறிமுகப்படுத்தும் 'ஃப்ளாஷ்பேக்'!!



கோயம்புத்தூர் நவ.29

இந்தியாவின் மிகப்பெரிய தனியார் துறை வங்கிகளில் ஒன்றான ஆக்சிஸ் வங்கி ஆனது , சீனியர் சிட்டிசன் வாடிக்கையாளர்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட 'ஃ ப்ளாஷ்பேக்' கேம்பைனை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முயற்சியின் மூலம், வங்கி தனது மூத்த வாடிக்கையாளர்களுடன் நல்லுறவை மேற்கொள்ளும். இதில், 60கள் மற்றும் 70களின் காலத்தால் அழியாத படங்களைப் பார்க்கும் மகிழ்ச்சியை அவர்களுக்கு வங்கி வழங்குகிறது.

ஆக்சிஸ் வங்கியின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி அனூப் மனோகர் கூறுகையில், "ஆக்சிஸ் வங்கியில், நிதி பரிவர்த்தனைகளுக்கு அப்பாற்பட்ட உறவுகளை உருவாக்குவதிலும் வளர்ப்பதிலும் நாங்கள் உறுதியாக நம்புகிறோம். 'தில் சே ஓபன்' என்ற எங்கள் பிராண்ட் தத்துவத்திற்கு உண்மையாக இருந்து, ஃப்ளாஷ்பேக், எங்கள் வாடிக்கையாளர்கள் பல ஆண்டுகளாக அவர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு அரவணைப்பு மற்றும் நன்றியுடன் அவர்களுடன் ஈடுபடுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

இந்த முயற்சியின் மூலம், இந்த பிணைப்புகளை வலுப்படுத்தவும், அவர்களுடன் நாங்கள் பகிர்ந்து கொண்ட பயணத்தைக் கொண்டாடவும் நாங்கள் இலக்கு வைத்துள்ளோம்.




### திருப்பத்தூரில்

## 20 மாணவர்களுக்கு ரூ.1.21 கோடி கல்வி கடன்!

### கலெக்டர் சிவ சௌந்தரவல்லி வழங்கினார்!!

திருப்பத்தூர் நவ29

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று சிறப்பு கல்விக்கடன் வழங்கும் முகாம் மாவட்ட கலெக்டர் சிவ சௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது. இதில்

மாவட்டம் முழுவதும் இருந்து இருபதுக்கும் மேற்பட்ட வங்கிகள் கலந்து கொண்டு மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்து 30க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு கல்வி கடன் கேட்டு பெற்றோர்கள் விண்ணப்பித்த நிலையில் விண்ணப்பத்தின் மீது சம்பந்தப்பட்ட வங்கி அலுவலர்கள் விசாரணை மேற்கொண்டு கடன் வழங்குவதற்கான ஆணைகளை பிறப்பித்தனர். அதன் அடிப்படையில் கல்வி கடனுக்கான காசோலைகளை மாவட்ட கலெக்டர் சிவ சௌந்தரவல்லி 20க்கு மேற்பட்ட உயர் கல்வி படிக்கும் மாணவர்களுக்கு 1 கோடியே 21 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் காசோலைகளை வழங்கினார். அப்போது உடன் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ராஜன் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## புதுக்கோட்டையில், புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி பேட்டி!

புதுக்கோட்டை,நவ.29

புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட கீழ 7ம் வீதி யில் உள்ள புவனேஸ்வரி அம்மன் கோயிலில் சாமி தரிசனம் மேற்கொண்ட புதுச்சேரி மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி செய்தி யாளர்களை சந்தித்தார். அப்போது அவருக்கு கூறுகையில்:

தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் ஆணையர் ராஜேஷ்குமார் பல மாநிலங்களில் வாக் கு திருட்டு சம்பந்தமாக புகார் அளித்தும் அவர் பாஜக உடைய கை பாவையாக செயல்பட்டு வருகிறார்.

பீகாரில் 65 லட்சம் வாக்களர்கள் நீக்கப்பட்டு மிகப் பெரிய ஜனநாயக படுகொலையை பாஜக செய் தது.தேர்தல் ஆணையர் ராஜேஷ்குமார் தேர்தல் துறையை பாஜகவின் அங்கமாக மாற்றி உள்ளார்.

தேர்தல் வரக்கூடிய நேரத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளை திட்டமிட்டு செய் கிறது.

அதற்கு காரணம் அவர்கள் யார் யார் மாற்று கட்சி க்கு வாக்களிக்கிறார்களோ பாஜகவுக்கு யார் வாக் களிக்கவில்லையோ அவர்களை நீக்கிவிட்டு பாஜ கவுக்கு ஆதரவாக இருப்பவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கானவேலையை ராஜேஷ்குமார் பிரதமர் மோடியோடும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவுடன் சேர்ந்து செய்து வருகிறார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணி களை நிறுத்த வேண்டும் என்று தமிழ்நாட்டிலும் காங்கிரஸ் திமுக உள்ளிட்ட கட்சிகள் கூறி வரு கிறது. ஐந்து மாநிலங்களில் தேர்தல் வரக்கூடிய சமய த்தில் எஸ்ஐஆர் பணியை ஏன் அவசர அவசரமாக செய்ய வேண்டும்.

இந்த நாட்டு மக்களுக்கு அம்பேத்கர் உருவாக்க ப்பட்ட இந்திய அமைப்பு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட வாக்குரிமையை பறிப்பதாகும். ஒருவருக்கு உருவாக்குதான் உண்டு. தமிழ்நாட் டில் புதுச்சேரியில் கர்நாடகாவில் கேரளாவில் பீகாரில் மேற்கு வங்காளத்தில் ஒரிசாவில் இருந்து வந்து பணிபுரிகிறார்கள் அவர்களது பெயரும் வாக்காளர் பட்டியலில் இருக்கிறது.

அவர்களுக்கு அந்த மாநிலத்திலும் வாக்கு இருக் கிறது இந்த மாநிலத்திலும் வாக்கு இருக்கிறது. அந்த மாநிலத்திலும் வாக்களித்துவிட்டு இந்த மாநிலத்திலும் வாக்களிக்க உள்ளனர். இதற்கு எந்தவித பதிலும் தேர்தல் ஆணையம் கொடுக்கவில்லை தேர்தல் ஆணையம் மோடியின் கை பாவையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் சிறப்பான ஆட்சியை தமிழ்நாட்டில் கொடுத்து வருகிறார். அதற்கு முக்கிய காரணம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார்.

இந்தியா கூட்டணியை குளைக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு பாஜக தலைமையில் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டு வருகிறது. அதில் அதிமுக சேர்ந்து கொண்டு தமிழ்நாட்டின் அமைதியை குளைப்பதற்கும் தமிழ்நாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும் வேலைகளை செய்து வருகின்றனர். அதற்கு மேல் ஆளுநர் ரவி முன் நின்று செய்து வருகிறார். தேர்தல் சமயத்தில் பிரதமர் மோடி கொடுத்த வாக்குறுதியான புதுச்சேரியை பெஸ்ட் மாநிலமாக மாற்றுவதாக தெரிவித்தார்.

பாஜக முன்னாள் தலைவராக இருந்த சாமிநாதன் தற்போது தவெகவிற்கு செல்கிறார். அவர் பாஜக தலைவராக இருந்த போது தலைவரும் அவர் தான் அக்கட்சியின் ஒரே ஒரு தொண்டரும் அவராகத்தான் இருந்தார். அவரை பாஜக கலட்ட விட்டு விட்டு காங்கிரஸ் கட்சியின் ஓடுகாளிகள் பாஜகவை ஆக்கிரமித்துள்ளனர் அவர்களும் எப்ப ஓடுவார்கள் என்று தெரியவில்லை. சாமிநாதன் பொருத்தவரை அவர் தவெகவுக்கு சென்றுள்ளார் வருங்காலத்தில் பார்ப்போம்....

பீகாரில் 7 கோடி 55 லட்சம் வாக்குகள் தான் வாக்காளர் பட்டியலில் உள்ளது. அப்புறம் எப்படி ஏழு கோடி 75 லட்சமாக மாறும் 20 லட்சம் வாக்கு எங்கிருந்து வந்தது என்று தெரியவில்லை என்று கூறினார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அரசு முதன்மை செயலாளர் ப.செந்தில்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ், இஆப., அவர்கள் முன்னிலையில் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதியதாக கட்டடப்பட்டு வரும் தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடத்தை ஆய்வு மேற்கொண்டார்.



போச்சம்பள்ளியில் துணை முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு போச்சம்பள்ளி ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி தலைமையில் கேக் வெட்டி கொண்டாடினார் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்வில் சரவணன், கௌதம், மருதேரி வடிவேல், தாபா சங்கர், இளையராஜா, அம்மன் ராஜா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ஈரோட்டில் பயங்கரம்:

# வீட்டில் தனியாக இருந்த மூதாட்டி கழுத்தை அறுத்து நகை கொள்ளை!

## மர்ம நபர்களுக்கு போலீஸ் வலை வீச்சு!!

ஈரோடு, நவ. 28

ஈரோட்டில் வீட்டில் தனியாக இருந்த மூதாட்டி கழுத்தை அறுத்து நகையை கொள்ளை அடித்து சென்ற மர்மநபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகிறார்கள்.

ஈரோடு பெரிய சேமூர் எல். வி. ஆர் .காலனி பகுதியை சேர்ந்தவர் மணி. இவருடைய மனைவி கமலம் வயது (60)இவர்களுடைய மகன் சேனாதிபதி இவர் புதுச்சேரியில் உள்ள ஒரு தனியார் வங்கியில் மேலாளராக பணியாற்று வருகிறார். இவருடைய மனைவி ஈரோடு மூலப்பாளையம் பகுதியில் வசித்து வருகிறார். மணி இறந்து விட்டதால் கமலம் தனியாக வசித்து வந்தார்.

விடுமுறை நாட்களில் சேனாதிபதி ஈரோட்டுக்கு வந்து தனது தாய் மற்றும் மனைவியை பார்த்து விட்டு செல்வார். மூலப்பாளையத்தில் உள்ள மருமகளும் அவ்வப்போது வந்து மாமியாரை பார்த்து விட்டு சென்றுள்ளார் மேலும் சேனாதிபதி தினமும் தன தாய்க்கு செல்போனில் தொடர்பு கொண்டு பேசுவதை வழக்கமாக கொண்டிருந்தார்.

அதன்படி நேற்று இரவு சேனாதிபதி தனது தாயின் செல் போன் எண்ணுக்கு தொடர்பு கொண்டு உள்ளார். ஆனால் அவர் எடுக்கவில்லை இதனால் அருகில் வசிப்பவர்களை தொடர் கொண்டு தனது வீட்டுக்கு சென்று பார்க்கும் படி கூறியுள்ளார்.



அதன்பேரில் அக்கம்பக்கத்தினர் கமலத்தின் வீட்டுக்குசென்று பார்த்தனர். அப்போது வீட்டில் உள்ள அனைத்து மின்விளக்குகளும் அணைக்கப்பட்டு இருந்தன. அங்கு சென்றவர்கள் மின்விளக்குகளை போட்டு பார்த்தனர்.

அப்போது வீட்டுக்குள் கமலம் கழுத்து அறுக்கப்பட்டு ரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தார் இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த அவர்கள் ஈரோடு வீரப்பன் சத்திரம் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர் .

அதன் பேரில் ஈரோடு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சுஜாதா ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பார்வையிட்டனர். மேலும் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டது அங்கு சிறிது தூரம் ஓடிச் சென்றது ஆனால் யாரையும் கவ்வி பிடிக்கவில்லை , கைரேகை நிபுணர்களும் அங்கு சென்று அங்கு பதிவாகி இருந்த ரேகைகளை பதிவு செய்தனர்.

போலீசார் விசாரணையில் மூதாட்டி வீட்டில் தனியாக வசித்து வந்ததை நோட்டமிட்ட மர்ம நபர்கள் இரவில் வீடு புகுந்து அவரை கொலை செய்து விட்டு அவருடைய கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் நகையை கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது.இதையடுத்து கமலத்தின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஈரோடு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து வீரப்பன்சத்திரம் போலீசார் வழக்கு பதிவு செய்து கமலத்தை கொலை செய்த மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகிறார்கள். மேலும் வீட்டில் வேறு ஏதாவது நகை கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் விசாரணை நடத்தி வருகின்றனர். அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகியுள்ள காட்சிகளையும் போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகர திமுக சார்பில் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 49 வது பிறந்தநாள் விழா பேருந்து நிலையம் அருகில் கொண்டாடப்பட்டது.நிகழ்ச்சிக்குநகரதிமுகசெயலாளர்வி.எஸ்.சாரதிகுமார்தலைமையில் கேக் வெட்டியும், இனிப்பு வழங்கினார். இதனை தொடர்ந்து பெருமாள் பேட்டை பகுதியில் இயங்கி வரும் சரணாலயம் டிரஸ்ட் கருணை இல்லத்தில் உள்ள 67 குழந்தைகள் மற்றும் 280 க்கும் மேற்பட்ட ஆதரவற்ற முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு மத்திய உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் நகரதிமுகதுணைச்செயலாளர் கே.தென்னரசு, நகரமன்றதுணை செயலாளர் கயாஸ் அஹமத், அவைத்தலைவர் முஹம்மத் ஜான், நகரமன்ற உறுப்பினர்கள் ஷாஹீன் பேகம் சலீம், பத்மாவதி, குபேந்திரன், மா.பா.சாரதி, ஏஜாஸ், தவுலத், முன்னாள் நகரமன்ற உறுப்பினர்கள் ஷஃபீ, ராணி உட்பட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர். முடிவில் சரணாலயம் டிரஸ்ட் கருணை இல்லம் காப்பாளர் டேவிட் சுபாஷ் நன்றி கூறினார்.

# உதயேந்திரம் பேரூர் திமுக 14 மற்றும் 15 வது வார்டு கிளைகள் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 49 வது பிறந்தநாள் விழா!



வாணியம்பாடி, நவ.29

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் பேரூர் திமுக 14 மற்றும் 15 வது வார்டு கிளைகள் சார்பில் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 49 வது பிறந்த நாள் விழா மேட்டுப்பாளையம் கூட்டுச் சாலையில் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு திமுக 14 வது வார்டு கிளைச் செயலாளர் ஏ.ராஜ்குமார் தலைமை வகித்தார். துணைத்

தலைவர் கோவிந்தராஜ், ராஜன், ராஜசேகர்,15 வது வார்டு கிளை செயலாளர் சிட்டி பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.வார்டு பிரதிநிதி அன்பு அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக பேரூர் திமுக செயலாளர் ஆ. செல்வராஜ் கலந்து கொண்டு துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டியும், இனிப்பு வழங்கி கொண்டாடினார்.

நிகழ்ச்சியில் பேரூர் திமுக பொருளாளர்மீர்முகமதுகனி,மாவட்டபிரதிநிதிகள் அம்பலவாணன், எம்.எஸ்.மேகநாதன், மாவட்டஆதிதிராவிடநலக்குழுதுணைத் தலைவர்அசோகன், 14 வது வார்டு கிளை துணை செயலாளர் கமலக்கண்ணன், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் இசைகுமார், பாபு, மன்ற உறுப்பினர்கள், கட்சி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர். முடிவில் பி.எல்.சி மாது நன்றி கூறினார்.



கிருஷ்ணகிரியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவினையொட்டி ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக கண் கண்ணாடியினை மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்.

# த.வெ.க.வில் செங்கோட்டையன்!

## கனிமொழி எம்.பி. கருத்து!



தூத்துக்குடி,நவ.29

தூத்துக்குடியில் கடந்த சில தினங்களாக பெய்த மழையின் காரணமாக தாழ்வான பகுதிகளில் சூழ்ந்துள்ள மழைநீரை வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் சுடலையாபுரம், மாதாநகர், ராஜபாளையம், பூபாண்டிபுரம் ஆகிய பகுதிகளில் கனமொழி எம்.பி. நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் பலர் உடனிருந்தனர். பின்னர் செய்தி யாளர்களை சந்தித்த கனிமொழி எம்.பி.யிடம் செங்கோட்டையன் த.வெ.க.வில் இணைந்தது குறித்து கேட்டபோது,

"அவர் எங்கள் கட்சியில் இருந்து போய் சேரவில்லை. நீங்கள் இந்த கேள்வியை எங்கிருந்து அவர் போனாரோ அங்கு கேட்க வேண்டும். இல்லை என்றால் அவர் எங்கு போய் இருக்கிறாரோ அங்கு கேட்க வேண்டும். என்னை கேட்டால்..." என்று கூறினார்.

# ரிஷிவந்தியம் அர்த்த நாரீஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேக விழா!



கள்ளக்குறிச்சி,நவ.29

தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர்.உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ரிஷிவந்தியம் ஊராட்சியில், 2000 ஆண்டுகளுக்கு மேல் பழமையான அர்த்த நாரீஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேக விழாவில்,

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம்_க_கார்த்திகேயன்,B.Sc,MLA, கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் M.S.பிரசாந்த் IAS,. ஆகியோர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, கும்பாபிஷேக விழாவை துவக்கி வைத்து, சாமி தரிசனம் செய்தனர்.

மேலும் இந்த விழாவில் மாநில, மாவட்ட, ஒன்றிய,கிளைக் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள்,அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பல்லாயிரத்திற்கும் மேற்பட்டோர் பெரும் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். முன்னதாக கும்பாபிஷேக விழாவில் கலந்து கொள்ள வருகை தரும் பொதுமக்களுக்கு ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன்,B.Sc,MLA,. ஏற்பாட்டில் அறுசுவை அன்னதான உணவு வழங்கப்பட்டது.

# மகனை கத்தியால் குத்திய தந்தை கைது!

தூத்துக்குடி,நவ.29

தூத்துக்குடி அண்ணாநகர் 3வது தெருவைச் சேர்ந்த துரைப்பாண்டி மகன் இசக்கிபாண்டி (வயது 42). இவரது மனைவி பரமேஸ்வரி. இந்த தம்பதிகளுக்கு சந்தோஷ்(17) என்ற மகனும் 2 மகள்களும் உள்ளனர். குடும்பத்தகராறு காரணமாக பரமேஸ்வரி கணவரை பிரிந்து, கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு தனது குழந்தைளுடன் முத்தையாபுரம் காந்திநகர் 3வது தெருவில் வசித்து வருகிறார். இந்த நிலையில் நேற்று இரவு இசக்கிபாண்டி அவரது வீட்டுக்கு சென்று மனைவியிடம் என்னுடன் குடும்பம் நடத்த வா, இல்லை என்றால் உன்னை கத்தியால் குத்தி கொலை செய்து விடுவேன் என்று மிரட்டி, கத்தியால் குத்த முயன்றார். அப்போது அவரை தடுக்க முயன்ற அவரது மகனுக்கு கையில் கத்தி குத்தியதால்காயம்ஏற்பட்டது. இதில்காயம்அடைந்த சந்தோஷ் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இந்த சம்பவம் குறித்த புகாரின் பேரில், முத்தையாபுரம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) சண்முககுமாரி வழக்குப்பதிவு செய்து இசக்கிபாண்டியை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# வாணியம்பாடியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலசேவைசங்கம் சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 49 வது பிறந்தநாள் விழா!



வாணியம்பாடி, நவ.29

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி புதூர் பகுதியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலசேவைசங்கம் சார்பில் துணைமுதலமைச்சர்உதயநிதிஸ்டாலின் 49 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு மாநில தலைவர் தி.ஸ்ரீகாந்த் தலைமை வகித்தார். துணைத் தலைவர் ச.தென்னரசன், கௌரிதலைவர் ஆ.திருப்பதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆலோசகர் கோ.ஆனந்தன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக நகர திமுக செயலாளர் வி.எஸ்.சாரதி குமார் கலந்து கொண்டு காந்தி சிலைக்கு மாலை அணிவித்து பின்னர் அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் நகரமன்ற துணைத்தலைவர் கையாஸ் அஹமத், சுபாஷிணி உட்பட நகரமன்ற உறுப்பினர்கள், திமுக கிளை செயலாளர்கள், மாற்றுத்திறனாளிகள் நலசேவைசங்கம் நிர்வாகிகள், பொதுமக்கள்கலந்துகொண்டனர். முடிவில் தி.ஸ்ரீதர் நன்றி கூறினார்.

# டெல் டெக்னாலஜீஸ் சென்னையில் புதிய Pro Essential லேப்டாப் வரிசையை அறிமுகம் செய்தது!




சென்னை, நவ.29

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக வடிவமைக்கப்பட்ட புதிய டெல் ப்ரோ 14 எஸென்ஷியல் மற்றும் டெல் ப்ரோ 15 எஸென்ஷியல் லேப்டாப்களை டெல் டெக்னாலஜீஸ் சென்னைில் காட்சிப்படுத்தியது. தாஜ் வெலிங்டனில் நடந்த நிகழ்வில் 300க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டு இந்த புதிய சாதனங்களை நேரடியாக அனுபவித்தனர். இந்த அறிமுகம் குறித்து பேசுகையில், இந்திரஜித் பெல்குண்டி, மூத்த இயக்குநர் மற்றும் பொது மேலாளர், Client Solutions Group, டெல் டெக்னாலஜீஸ் இந்தியா, “இந்தியா எங்களுக்கான முக்கிய சந்தை; SMB துறைக்கு நாங்கள் வழங்கும் ஆதரவை இந்த நிகழ்வு மேலும் வலுப்படுத்துகிறது” என்று தெரிவித்தார்.

புதிய Pro Essential வரிசை பாதுகாப்பு அம்சங்கள், நிர்வாகத் திறன் மற்றும் நம்பகமான செயல்திறனைக் கொண்ட எண்ட்ரி லெவல் பிசினஸ் PCகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது. AMD மற்றும் Intel வகைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த லேப்டாப்கள், ரூ. 31,999 என்ற தொடக்க விலையிலேயே கிடைக்கின்றன. தினசரி பணிகள், அலுவலக உற்பத்தித் திறன் மற்றும் பல பணிகளை ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய SMB பயனர்களுக்கான முக்கிய தொழில்நுட்பங்களை இந்த Pro Essential வரிசை வழங்குகிறது.



கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட டாடாபாத் பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக பெறப்பட்டு வருவதை மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சி துணை ஆணையாளர் த.குமரேசன், சுகாதார ஆய்வாளர் சரவணக்குமார் ஆகியோர் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வி.சியாமளா தேவி தலைமையில் குற்றவியல் நீதி அமைப்பை சிறப்பாக செயல்படுத்த காவல்துறை மற்றும் அரசுத்தரப்பு வழக்கறிஞர்கள் இடையிலான ஒருங்கிணைப்புக்கூட்டம் நடைபெற்றது. இக்கலந்தாய்வுகூட்டத்தில் குற்றவழக்கு தொடர்புதுறை துணை இயக்குனர் சிவகாமி பங்கேற்று பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகள் மேலும் சில வழக்குகளை எவ்வாறு கையாள வேண்டும் என எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.